## தமிழ்நாட்டின் நலனை – மாநிலப் பிரதிநிதித்துவத்தைப் பாதிக்காதபடி தொகுதி மறுசீரமைப்புத் தேவை!

# காவிரிப் பிரச்சினையில் நம் உணர்வை வெளிப்படுத்துவதை விடுத்து த.வெ.க. அரசு 'டேக் டைவர்சன்' அரசியல் செய்ய வேண்டாம்!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவுறுத்தல்!

சென்னை, ஆக. 8 -

**"தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் 'Fair Delimitation' வேண்டும் என்பதில் தி.மு.க. உறுதியாக இருக்கிறது" "காவிரிப் பிரச்சினையில் ஒற்றுமையாக இருந்து தமிழ்நாட்டின் உணர்வை வெளிப்படுத்த வேண்டிய நேரத்தில், த.வெ.க. அரசு 'டேக் டைவர்சன்' அரசியலை மேற்கொள்ள வேண்டாம்" என கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் நலனையும், நம் மாநிலத்திற்குரிய பிரதிநிதித்துவத்தையும் பாதிக்காத வகையில் 'Fair Delimitation' மேற்கொள்ள வேண்டும் என்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுதியான நிலைப்பாடு.

### தி.மு.க. நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை!

கடந்த ஆண்டு மார்ச் மாதம் தமிழ்நாடு அரசின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட நிலைப்பாட்டில் தி.மு.க. இப்போதும் உறுதியாக இருக்கிறது. எங்களுடைய நிலைப்பாட்டில் எந்த மாற்றமும், தடுமாற்றமும் இல்லை.



நடைபெற்று வரும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் அலுவல் அட்டவணையில் தொகுதி மறுசீரமைப்பு மசோதா அறிமுகப்படுத்துவது தொடர்பாக எதுவும் தெரிவிக்கப்படாத நிலையில், தொகுதி மறுசீரமைப்பு மசோதா தொடர்பாக என்ன செய்ய வேண்டும் என்று தி.மு.க.வுக்கு அறிவுரை சொல்லும் தகுதி எந்தக் கட்சிக்கும் இல்லை. முறையற்ற தொகுதி மறுசீரமைப்பால் இந்திய அளவில் ஏற்படவுள்ள ஆபத்தை முதன்முதலாக எடுத்துரைத்து, அதற்கெதிரான வலுவான கருத்தை உருவாக்கி, ஒருமித்த குரல்களை ஒன்றிணைத்ததே தி.மு.க.வும் எங்கள் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும்தான் என்பதை நாடறியும்.

### தொகுதி மறுசீரமைப்பு மசோதாவை தேசிய அளவில் பேச வைத்தோம்!

சென்னையில் இதற்கான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தைக் கூட்டி, பாதிப்புக்குள்ளாகும் அனைத்து மாநிலங்களையும் ஓரணியில் திரட்டி, இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்து, இந்த விவகாரம் குறித்து தேசிய அளவில் விவாதிக்க வைத்தோம்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தலுக்கான பரப்புரை உச்சக்கட்டத்தில் இருந்தபோதே, "தேர்தல் கூட எங்களுக்குப் பிறகுதான்; தமிழ்நாட்டின் உரிமையைப் பறிக்கும் வகையில் அமைந்திருக்கும் தொகுதி மறுசீரமைப்பு மசோதாவை எதிர்ப்பதுதான் எங்களது முதல் பணி" எனப் பிரகடனம் செய்து, தமிழ்நாட்டில் உள்ள இல்லங்களின் முன் கருப்புக் கொடியேற்ற அழைப்பு விடுத்து, அந்தச் சட்டமுன்வரைவின் நகலை எரித்து எதிர்ப்புக் காட்டியவர்தான் எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

எனவே, இவற்றின் அடிப்படையில், தற்போதைய அரசு ஆகஸ்ட் 8 அன்று அழைப்பு விடுத்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்தாய்வுக் கூட்டத்திலும் தி.மு.க. உறுப்பினர்கள் கலந்துகொண்டு, எங்களது கருத்தைத் தெரிவிப்பதில் எங்களுக்குத் தயக்கம் இல்லை.

### அனைத்துக் கட்சித் கூட்டத்தைக் கூட்ட த.வெ.க. அரசுக்கு என்ன பயம்?!

ஆனால், அதற்கு முன்பாக, கர்நாடக அரசு மேகதாது அணை கட்ட முனைப்புக் காட்டும் விவகாரம் குறித்து விவாதிக்கவும், தமிழ்நாட்டிலுள்ள கட்சிகளின் ஒற்றுமையை வெளிப்படுத்தவும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்ற நிபந்தனையைத் தமிழ்நாடு அரசிடம் திராவிட முன்னேற்றக் கழகம் முன்வைக்கிறது.

### தமிழ்நாட்டை பாதிக்கவிடாமல் தடுக்க தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. இருக்கும்!

புதுக் கூட்டாளியான காங்கிரசின் மனம் புண்படும் என்பதால் மேகதாது விவகாரத்தில் கள்ள மவுனம் காத்துக்கொண்டு, ஏற்கனவே முடிவெடுக்கப்பட்ட தொகுதி மறுசீரமைப்பு மசோதா தொடர்பாக மட்டும் கூட்டம் கூட்டுவதை ஏற்க முடியாது!

தொகுதி மறுசீரமைப்பின் காரணமாக தமிழ்நாட்டுக்கான பிரதிநிதித்துவ உரிமை பாதிக்கப்படக் கூடாது; பாதிக்கப்பட்டால் அதைத் தடுக்கும் முன்னணிப் படையாகக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க. இருக்கும். அதேநேரத்தில், இன்றைய சூழலில் காவிரி உரிமையை மீட்பதும், மேகதாது அணையைத் தடுப்பதும் மிக மிக முக்கியமானவை. தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த உணர்வை வெளிப்படுத்த வேண்டிய அவசிய அவசரம் இப்போது எழுந்துள்ளது. இந்த நேரத்தில் த.வெ.க. அரசு 'டேக் டைவர்ஷன்' அரசியலை மேற்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# டெல்டா மாவட்டங்களை வறட்சிப் பகுதிகளாக அறிவித்திடுக! மேகதாது விவகாரத்தில் அரசு எடுத்த நிலை என்ன?

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!..

முதல் பக்கத் தொடர்ச்சி

கூட்ட வேண்டும் என்று, தொடர்ந்து வலியுறுத்தி கேட்டுக்கொண்டு வருகிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளும், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்கள். ஏன் கேட்டுக்கொள்கிறோம் என்றால், கர்நாடகா முதலமைச்சரும் அந்த அரசும் மேகதாது விஷயத்தில், மிகவும் வேகமாகச் செயல்பட்டு வருகிறார்கள்.

### கர்நாடக முதலமைச்சர் வேகம்!

ஜூன் 11ஆம் தேதி, ஒன்றிய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களை, கர்நாடக முதலமைச்சர் நேரில் பார்த்து மேகதாது அணை கட்டுவதற்கு நிதியுதவி வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார். ஜூன் 12 ஆம் தேதி ஒன்றிய ஜல்சக்தி துறை அமைச்சர் சி.ஆர்.பாட்டீல் அவர்களை நேரில் பார்த்து, மேகதாது திட்டத்துக்கு நீங்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.

ஜூலை 27ஆம் தேதி அன்று நாடாளுமன்றத்தில், ஒன்றிய ஜல்சக்தி துறை இணை அமைச்சர் மேகதாதுவில் அணை கட்ட தமிழ்நாடு, புதுச்சேரி மாதிரியான கீழ்படுகை மாநிலங்கள், அதாவது `லோயர் லிப்பேரியன் ஸ்டேட்ஸ்' அதன் அனுமதி தேவையில்லை என்று கூறியிருக்கிறார்.

அதே நாள் ஜூலை 27ஆம் தேதி, டெல்லியில் கர்நாடகாவைச் சேர்ந்த அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் கூட்டத்தை, கர்நாடக முதலமைச்சர் அவர்கள் நடத்தியிருக்கிறார். கர்நாடக அமைச்சர் ராமலிங்கா ரெட்டி, கர்நாடக அரசின் டெல்லி பிரதிநிதி, கர்நாடகா அரசின் தலைமை வழக்கறிஞர், மூத்த அதிகாரிகள் எல்லோருடனும் சேர்த்து, மேகதாது சம்பந்தமாக அந்த மாநில முதலமைச்சர் ஆய்வுக் கூட்டத்தையும் நடத்தி இருக்கிறார்.

எல்லாவற்றுக்கும் மேல், ஆகஸ்ட் 2ஆம் தேதி பெங்களூரில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவோம் என்று கர்நாடக முதலமைச்சர் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பும் விடுத்துள்ளார்.

சீதா ராமையா, பசவராஜ் பொம்மையா, எடியூரப்பா, குமாரசாமி,வீரப்ப மொய்லி என ஐந்து முன்னாள் முதலமைச்சர்கள் உட்பட அந்த முக்கியமான கூட்டத்தில், முக்கியமான தலைவர்கள் அனைவரும் கலந்துகொண்டுள்ளார்கள்.

### ஒரு மாதத்தில் பல நடவடிக்கைகள்!

கர்நாடக முதலமைச்சர் அந்தக் கூட்டத்தில் ஊடகங்களைச் சந்தித்து, தெளிவாக பேட்டியும் கொடுத்திருக்கிறார். இப்படி அவர்கள் ஸ்டெப் பை ஸ்டெப்பாக ஒரு மாதத்தில் பல நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறார்கள். மாநில நலன் என்று வந்தால், அவர்கள் எப்படி அரசியல் வேறுபாடுகள் எல்லாம் பார்க்காமல், மாறுபாடுகளைக் கடந்து, மறந்து ஓரணியில் நிற்கிறார்களோ, அதேபோல நாமும் நம் ஒற்றுமையை கர்நாடக அரசுக்கும், ஒன்றிய அரசுக்கும் காட்ட வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று எங்கள் கோரிக்கையைத் தொடர்ந்து வைத்துள்ளோம்.

விவசாயிகள் மேல் அக்கறை உள்ள ஒரு அரசு, இவற்றையெல்லாம் கேட்காமல் தானாகவே செய்ய வேண்டும். ஏன் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட மறுக்கிறீர்கள் என்பதுதான், சிம்பிளாக நான் கேட்கக்கூடிய கேள்வி.

## பயிர்க் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய எவ்வளவு காலம் தேவை என்பதையும் சொல்ல வேண்டும்!

நாம் தொடர்ந்து அழுத்தம் கொடுத்த பிறகு இப்போது ஜூலை 28ஆம் தேதியன்று, பிரதமருக்கு இரண்டாவது கடிதத்தை நம் முதலமைச்சர் அவர்கள் எழுதியிருக்கிறார்.

எங்கள் தலைவர் முதலமைச்சராக இருந்தபோது, தமிழ்நாட்டின் பிரச்சினைகளுக்காக கடிதங்கள் எழுதுவதை விமர்சித்து, இப்போது இங்கு இருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் என்னென்ன பேசியிருக்கிறார் என்பதை இங்கு ரீவைண்ட் செய்து பார்க்க வேண்டும்.

### இன்றைக்கு நம் அரசின் நிலை என்ன?

முதலமைச்சர் பேசியதை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அதை நீங்கள் அவை குறிப்பில் இருந்து நீக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

'ஸ்டாலின் அவர்கள், அப்போ அப்போ எழுந்து கடிதம் எழுதிவிட்டு, தூங்க போய்விடுவார். அவ்வளவுதான். அது அப்படியே கிடக்கும். மானே, தேனே, பொன் மானே இப்படிக் கடிதம் எழுதுவது எல்லாம் இனி மேல் வேலைக்கு ஆகாது என்று சொன்னார். இன்றைக்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அந்தப் பிரச்சினை தீவிரமான பிரச்சினை என்று நீங்களே சொல்லிவிட்டீர்கள், நாங்கள் கேட்பதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவிரிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, கர்நாடக அரசு தொடர்ந்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அங்கு இருக்கின்ற அனைவரின் கருத்துகளையும் கேட்கிறார்கள். ஏன், தமிழ்நாடு அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவதைத் தவிர்க்கின்றது என்பதுதான் எங்களின் கேள்வி.

பேரவைத் தலைவர் வாயிலாக இன்னொன்றை இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அரசு ஒரு 'புது டெக்னிக்கை' தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார்கள். எதையாவது ஒன்றை செய்வதற்கு முன்பு, அந்தச் செய்தியை இவர்களே அதை கசிய (லீக்) செய்து விடுகிறார்கள். அதற்கு எதிர்ப்பு பலமாக இருந்தால், யூ டர்ன் போட்டுவிடுகிறார்கள்.

### எந்த முடிவும் எடுக்கவில்லை!

முதலமைச்சர் அவர்கள் கர்நாடாக செல்கிறார் என்று வேளாண் துறை அமைச்சர் ஒரு பேட்டி கொடுக்கிறார். பிறகு, அவரே அதை மறுத்து பேசுகிறார். இன்னும் இரண்டு அமைச்சர்கள் அதிகாரபூர்வமாக எந்த முடிவும் எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். 13 பேர் கொண்ட ஒரு குழு செல்கிறது என்று திருப்பியும் செய்திகளில் பார்த்தோம். கடைசியில் என்னாயிற்று என்றால், கர்நாடக முதலமைச்சர் சொல்லிவிட்டார். "தமிழ்நாடு முதலமைச்சர் இங்கு வரவேண்டாம். நாங்கள் தண்ணீர் கொடுப்பதற்கு தயாராக இல்லை" என்று கர்நாடக முதலமைச்சர் தெரிவிக்கிறார்.

### அனைத்துக் கட்சிக்கூட்டம்!

தவறாக எதுவும் பேசவில்லை. அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டப் போகிறீர்களா இல்லையா? எப்பொழுது கூட்டப்போகிறீ ர்கள்?

இவற்றையெல்லாம் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். முதலில், தமிழ்நாடு முதலமைச்சர் கர்நாடகா செல்வதாக இருந்தாரா? அப்படி இருந்தால், ஏன் செல்லவில்லை? இப்பொழுது உங்கள் நிலை என்ன என்பதுதான், எங்களின் கேள்வி.

இரண்டாவது பிரச்சினை பயிர்க் கடன் பற்றி சொல்ல விரும்புகிறேன். தேர்தல் வாக்குறுதியில் நீங்கள் கொடுத்த வாக்குறுதி. பயிர்க் கடன் முழுமையாகத் தள்ளுபடி செய்வோம் என்று சொன்னீர்கள். ஆனால், கொடுக்கவில்லை. இதற்கும் சேர்த்துதான் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். தள்ளுபடி செய்ய கால அவகாசம் வேண்டுமென்றால், எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதைச் சொல்ல வேண்டும்.

டெல்டாவில் உள்ள அனைத்துத் தரப்பு விவசாயச் சங்கப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசும்படி, முதலமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்ட வேண்டும். குறுவையில் நஷ்டத்தைச் சந்தித்து இருக்கின்ற விவசாயிகளுக்கு இந்த அரசு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் ஆட்சியில் 6.5 லட்சம் ஹெக்டர் அளவுக்கு, குறுவை நெல் சாகுபடி நடந்தது. ஆனால், இந்த ஆட்சியில் இந்த வருடம் வெறும் 1.5 லட்சம் ஹெக்டர் அளவுக்குத்தான் குறுவை சாகுபடி நடந்துள்ளது.

நீங்கள் `ஸ்பெஷல் பேக்கேஜ்' என்று சொல்லி ரூ.134 கோடி அறிவித்திருக்கிறீர்கள். அதை எத்தனை பேருக்குக் கொடு த்திருக்கிறீர்கள் என்பதை இந்த அவையில் தெரிவிக்க வேண்டும்.ஏதாவது, கணக்கெடுப்பு எடுத்திருக்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே `ஸ்பெஷல் பேக்கேஜில்' நீங்கள் கொடுத்தது ரூ.134 கோடி. அது அனைத்து அரசிலும் கொடுக்கின்ற ஸ்பெஷல் பேக்கேஜ்தான். இப்போது அவர்கள், `வறட்சி நிவாரண நிதி' கேட்கிறார்கள். இவை இரண்டுக்கும் வித்தியாசம் தெரிந்துகொள்ள வேண்டும். தினமும் காலையில் பேப்பர் படித்தால் மட்டும் பத்தாது, அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அனைத்து விவசாயிகளையும் அழைத்துக் கலந்து பேசி, அவர்களின் கோரிக்கைகள் என்ன என்று தயவுசெய்து நீங்கள் கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும்.

### என்ன பயம், என்ன தயக்கம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் திரும்ப திரும்ப கேட்பதுதான். கர்நாடகாவில் அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அவர்களின் கோரிக்கைகளை எல்லாம் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், இந்த த.வெ.க. அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு என்ன பயம், என்ன தயக்கம் என்பதைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

### திசை திருப்பப் பார்க்கிறார்!

குறுவையை பாதித்த நிலையில் இன்றைக்கு சம்பாவும் பாதிக்கப்படும் நிலையில் விவசாயிகளின் தொடர் கோரிக்கை வாயிலாக, டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்கவும், அதற்கான நிவாரணங்களை பெறவும் அவர்கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதையும் இந்த அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நாம் என்ன விஷயமாக பேசிக்கொண்டு இருக்கிறோம். பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னதால், உங்களின் வார்த்தையை மதித்து, ஒத்திவைப்புத் தீர்மானம் எதற்கு கொடுத்தோமோ அதைப்பற்றி மட்டும் பேசினேன். ஏன் தண்ணீர் வரவில்லை. எப்போது தண்ணீர் வர வேண்டும் என்று கேட்கிறேன். பயிர்க் கடன் தள்ளுபடி எப்போது செய்வீர்கள் என்று கேட்கிறேன்.

அதற்கு சம்பந்தமே இல்லாமல் நம் அமைச்சர் அவர்கள் திசை திருப்பப் பார்க்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தொகுதி மறுவரையறையைப் பற்றி ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் முன்மாதிரியாக அதை பற்றி முதன்முறையாக பேசியது, எங்கள் திராவிட முன்னேற்றக் கழகம், எங்கள் கழகத் தலைவர் அவர்கள்தான்.

சென்ற ஆண்டு தென் மாநிலங்களில் இருந்து 5 முதலமைச்சர்களை, சென்னைக்கு வரவழைத்து ஒரு மிகப் பெரிய ஆலோசனைக் கூட்டத்தை நடத்தி, இந்தத் தொகுதி மறுவரையறையை எதிர்த்து முதன்முறையாக இந்தியாவிலேயே குரல் கொடுத்த தலைவர் எங்களின் தலைவர்.

நாளை நீங்கள், இந்த அரசு, முதலமைச்சர் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்திருக்கிறீர்கள். இதற்கான சரியான முடிவை எங்களின் தலைவர், ஆலோசனை செய்து அந்த முடிவை அவர் எடுப்பார். இப்போது நாம் பேசிக்கொண்டு இருப்பது நிதிநிலைமை, வேளாண்மை பட்ஜெட்டை பற்றி, அதற்கு எங்கள் உறுப்பினர்கள் கேள்வி கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கு முடிந்தால் நீங்கள் பதில் சொல்லுங்கள்.

இவ்வாறு சட்டப் பேரவையில், எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரை ஆற்றினார்.

